Tamil
தமிழ்

# பெண் பிள்ளைகளும் பெண்களும்

## நான் சொல்லப் போவது உங்களுக்கு முக்கியமான தகவலாகும்

மரியாதையுடன் நடத்தப்படுவதற்கான உரிமை உங்களுக்கு உண்டு
- உங்களை மரியாதையின்றி நடாத்தவோ, கேலி செய்யவோ அல்லது தாக்கவோ யாருக்கும் (எப்போதும்) உரிமை இல்லை.

உங்கள் சொந்த நிதியைக் கையாள உங்களுக்கு உரிமை உண்டு
- கல்வி கற்கவும், வேலை தேடவும் நீங்கள் சம்பாதிக்கும் பணத்தின் மூலம் என்ன செய்ய வேண்டும் என்பதை தீர்மானிக்கவும் உங்களுக்கு உரிமை உள்ளது.

உங்களுக்கே உரிய கருத்துக்களைக் கொண்டிருப்பதற்கும், அவற்றை சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கும் உங்களுக்கு உரிமை உண்டு
- நீங்கள் என்ன நினைக்க வேண்டும், எதை உணர வேண்டும் அல்லது யாருடன் நேரத்தை செலவிட வேண்டும் என்று கூறும் உரிமை யாருக்கும் இல்லை.




நீங்கள் எங்கு சென்றாலும், நீங்கள் பாதுகாப்பாகவும் தற்பாதுகாப்புடனும் இருப்பதாக உணரும் வாழ்க்கையை வாழ உங்களுக்கு உரிமை உண்டு
- நீங்கள் ஒருபோதும் உங்கள் சொந்த வீட்டில், உங்கள் பள்ளியில் அல்லது உங்கள் பணியிடத்தில், உணவகத்தில், நகரத்தில் அல்லது காட்டில் பாதுகாப்பற்று இருப்பதாக அல்லது அச்சத்தை உணரக் கூடாது.

உங்கள் உடலைப் பற்றித் தீர்மானிக்க உங்களுக்கு உரிமை உண்டு
- உங்கள் உடல் உங்களுக்கு மட்டுமே உரியது. உங்களை யார், எங்கு, எப்போது தொட வேண்டும் என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள்.

உங்கள் கணவரோ, உங்கள் தந்தையோ, உங்கள் காதலனோ, சகோதரனோ, மாமாவோ இந்த உரிமைகளை உங்களிடமிருந்து பறிக்க முடியாது.

## எந்த விதமான வன்முறையும் இல்லாத வாழ்க்கையை வாழ உங்களுக்கு உரிமை உண்டு

உங்கள் உரிமைகள் மதிக்கப்படாவிட்டால், ஆதரவைப் பெற உங்களுக்கு உரிமை உண்டு
Terrafem உங்களை ஆதரிக்கவும், உங்கள் உரிமைகளுக்காகவும் அனைத்து பெண்களின் உரிமைகளுக்காகவும் போராடுகிறது

*020-521010*